போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்திலிருந்து மின்சாரம் விநியோகித்தால் நம்அரசாங்கக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோமே, விவசாயிகளுக்கு காலையிலே 4 மணி நேரம் மாலையிலே 4 மணி நேரம் என்பது இயங்காமல் போய்விடும் என்பதற்காகத்தான் அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதாவது அங்குள்ள அதிகாரிகளுக்கு, அந்த மின்சாரத்தை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிற அந்த அதிகாரிகளுக்கு வீட்டு வசதி போன்ற சில வசதிகள் இல்லாததால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது என்று பரவலாகப் பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மின்சார சப்ளையானது எங்கள் தொகுதியிலே சரியாக இல்லை. அதற்கும் சீராக விவசாய மக்களுக்கு மின்சாரத்தை கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை பற்றி நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் கண்டிப்பாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஆய்வு செய்து, அதுபோல அதிகாரிகளுக்காக அது நிறுத்தி வைக்கப்பட்ட திட்டம் என்பது எங்களுக்குத் தெரிந்த வரை அதுபோல இல்லை. அதுமாதிரி அதிகாரிகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டால் அது ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் இயக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, இராயபுரம் பகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.

*128. — (*வினா எண். 1314)*

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, இராயபுரம் பகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1989 ஏப்ரல், 15]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் குடிசை மாற்றுத் திட்டப் பணிகளில் 2,458 குடியிருப்புகள் உள்ளன. இந்த குடியிருப்புகளில் 5 குடிசை மாற்று திட்டப் பகுதிகளுக்கு 2,615 லட்சம் செலவில் சிறப்பு பழுதுபார்க்கும் திட்டம், ஸ்பெஷல் ரிப்பேர்ஸ், பணிகள் அமைக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுவர்பூச்சு வேலைகள் சுவர்களுக்கு சுண்ணாம்பு மற்றும் கதவு ஜன்னல்களுக்கு பெயிண்ட் அடித்தல், உடைந்து போன கழிப்பறைகளுக்கு 'வாட்டர் குளோசஸ்ட்' மாற்றுதல், கசிவுகளை அடைத்தல், மேல் கூரைகளில் ஓடு அமைத்தல் போன்ற சீர்திருத்த பணிகள் நடைபெற உள்ளது. இந்த பணிகளுக்கான செலவுத் தொகை ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக கடன் கேட்கப்பட்டுள்ளது. அந்த கடன் தொகை வந்தவுடன் இந்த பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, இராயபுரம் பகுதியில் ஏழை மீனவர்கள் வாழ்கின்ற பகுதியான சிங்காரவேலர் நகர் குடிசைப் பகுதியிலேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் பின்தங்கிய மக்கள் ஏழைகள் வாழ்கின்ற பகுதியான செட்டித் தோட்டம் குடிசைப் பகுதிகளிலும் மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன அரிய கருத்தை நிதி நிலைமையைப் பார்த்து, அங்குள்ள நிலைமைகளை எல்லாம் நேரில் சென்று பார்த்து அதற்கான திட்டத்தை தீட்ட இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு.**— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)